# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2024.03.28 |


## கட்டடவாக்கத் தொழிற்துறைக்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் - 2024 பெப்புருவரி

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண், 57.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்திருந்த மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 பெப்புருவரியில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் விரிவடைதலை எடுத்துக்காட்டுகின்றது.** தற்போதைய ஆக்கபூர்வமான சூழலும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த பல கருத்திட்டங்கள் மீளத்தொடங்கியமையும் கட்டடவாக்க நடவடிக்கைகளில் வளர்ச்சிக்கு காரணமாகவிருந்தன என பல நிறுவனங்கள் குறிப்பிட்டன.

தொடர்ச்சியாக இரண்டாவது மாதத்திற்காகவும் புதிய கட்டளைகள் தொடர்ந்தும் அதிகரித்து தொழில்துறையில் மேம்பட்ட கேள்வி நிலைமைகளைப் பிரதிபலித்தன. பாரியளவிலான உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள், குறிப்பாக வெளிநாட்டு நிதியளிக்கப்பட்டவை கிடைக்கப்பெறுகின்ற விலைக்கோரல் வாய்ப்புக்களுக்கு மத்தியில் காணப்படுவதாக பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனினும், தொழில்நிலையானது முன்னைய மாதத்தைவிட மெதுவான வீதமாயினும் பெப்புருவரியில் சுருக்கமடைந்தே காணப்பட்டது. தேர்ச்சிபெற்ற மற்றும் அனுபவம்வாய்ந்த கட்டடவாக்கப் பணியாளர்களின் பற்றாக்குறை பற்றி பல அளவீட்டு பதிலிறுப்பாளர்கள் எச்சரிக்கை தெரிவிக்கின்றனர். அதிகரித்த குழாய் கருத்திட்டங்கள் காரணமாக கொள்வனவுகளின் அளவு மேம்பட்டது. மாதகாலப்பகுதியில் கட்டடவாக்கப் பொருட்களின் விலை மட்டங்கள் கீழ் நோக்கிய சரிப்படுத்தலை குறித்துக்காட்டின. அதேவேளை வழங்குநர்களின் விநியோக நேரம் பெப்புருவரியில் மேலும் நீட்சியடைந்தது.


**கொமுசு தொகுப்பு: கட்டடவாக்க அளவீடு**

| மாறி | சன. 2024 | பெப். 2024 | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **52.9** | **57.1** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 55.7 | 58.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 42.9 | 45.7 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 55.7 | 58.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 52.9 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பிரதானமாக அதிகரித்த கருத்திட்டங்கள் கிடைக்கப்பெறுகின்றமையின் காரணமாக அடுத்த மூன்று மாதங்கள் பற்றி அநேகமான நிறுவனங்கள் சாதகமான எண்ணப்பாங்கினைக் கொண்டுள்ளன.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**57.1**
**2024 பெப்புருவரி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு தொகுப்பு - கட்டடவாக்கம்

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |
| பிரான்ஸ் | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஜேர்மனி | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |
| அயர்லாந்து | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |
| இத்தாலி | மேம்பட்டுள்ளது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | சீர்குலைந்தள்ளது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 மாச்சு 27 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.